**கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,சென்னை–15.**
**பிறப்பிப்பவர்: முனைவர்.(திருமதி).கோ.கீதா எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,**

**ந.க.எண். 46204/அ4/2023** **நாள்.12.12.2023**

பொருள்: கல்லூரிக் கல்வி இயக்ககம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை நியமனம் – இளநிலை உதவியாளர் – திரு.நா.சாய்பாலாஜி – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. சென்னை–06, கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.42546/பி2/2019, 25–01–2022 நாளிட்ட பணி நியமன ஆணை.
2. அரசாணை நிலை எண்.33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (Q1) துறை, நாள்: 08–03–2023.
3. கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கடித ந.க.எண்.1058/பி1/2023, நாள்.06–12–2023

------

பார்வை (1)–ல் காணும் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் சென்னை–5, மாநிலக் கல்லூரியில் (தன்னாட்சி) சிறப்பு நிலை ஆய்வக உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு.கி.நாகராஜன் என்பார் பணிக்காலத்தில் இயற்கை எய்தியதால், அன்னாரின் வாரிசுதாரர் திரு.நா.சாய்பாலாஜி என்பாருக்கு கருணை அடிப்படையில் இராணிப்பேட்டை மாவட்டம், ஜம்புகுளம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளநிலை உதவியாளராக பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, அன்னார் 27–01–2022 அன்று முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை (2)–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படுபவர்களுக்கு நியமன அதிகாரியே பணிவரன்முறை செய்து ஆணை வழங்கலாம் என பார்வை (3)–ல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.) அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், இளநிலை உதவியாளர் திரு.நா.சாய்பாலாஜி என்பார் பணியில் சேர்ந்து ஓர் ஆண்டு காலம் முடிவுற்றமையால், அன்னார் பணியில் சேர்ந்த நாளான **27.01.2022** முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

மேற்காணும் பணியாளருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலக்கட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வு மற்றும் அரசு பணியாளர்களுக்கான பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கோ.கீதா 12/12/23

கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ.)

பெறுநர்:
சார்ந்த பணியாளர்
**நகல் :**
"பி" பிரிவு
"அ2" இருக்கை

அ.கீதா
12/12/2023